ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2497/37 - 2026 ජූලි මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.07.16

2497/37 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.-பி. 5/2021

**2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம்**

2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 17 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 48 ஆம் பிரிவின் கீழ் வலுசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டவையும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவையுமான ஒழுங்குவிதிகள்.

**அனுர கருணாதிலக்க**
வலுசக்தி அமைச்சர்

கொழும்பு,
2026, யூலை 13.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. அடையாளங்காணப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துண்டங்களினுள் பெற்றோலிய வளங்களைத் தேடிக்கண்டறிவதற்கு அல்லது அபிவிருத்தி செய்வதற்கு விரும்புகின்ற எவரேனுமாள் (இதனகத்துப்பின்னர் இவ்வொழுங்குவிதிகளில் "விலைகூறல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலீட்டு முன்மொழிவொன்றை, இயைபான விலைகூறலுக்கான அழைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு, நிருவாகக் கட்டணமொன்றின் கொடுப்பனவுடன்சேர்த்து, சமர்ப்பித்தல் வேண்டும்.

1A - PG 7806 - 353 (2026/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. ஒழுங்குவிதி 2 இல் குறிப்பீடு செய்யப்பட்ட விலைகூறலானது, விலைகூறலுக்கான அழைப்பிற்கான கோப்புத் தொகுப்புகளில் குறித்துரைக்கப்பட்டவாறான ஒத்த படிவத்தில் செம்மையான தகவல்களை உள்ளடக்குதல் வேண்டும்.

4. ஒழுங்குவிதி 2 இன்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விலைகூறல்கள், விலைகூறலுக்கான நேரொத்த அழைப்பில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகளுக்கிணங்க, துறை அமைச்சரினால் நியமிக்கப்பட்ட கருத்திட்டக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

5. கருத்திட்டக் குழுவானது, அதன் விதப்புரைகளை, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுவுக்கும் (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபைக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

6. பேச்சுவார்த்தைக் குழு மற்றும் அதிகாரசபை அவசியமானவிடத்து கருத்திட்டக் குழுவின் உதவியுடன் இயைபான மாதிரி பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையினுள்ளும் ஒன்றிணைக்கப்படவேண்டிய நியதி நிபந்தனைகள் பற்றி ஒப்பந்தக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துதல் வேண்டும்.

7. அதிகாரசபையானது, இறுதியாக்கப்பட்ட பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையை அமைச்சருக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சர் அதனை அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

EOG 07 - 0192

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*